கனம் திரு. பூ. கக்கன் : இராமநாதபுரம் ஜில்லாவில், பரமக்குடியில் ஒரு விவசாய ஸ்கூல் இருக்கிறது. மதுரை ஜில்லாவில் விவசாய ஸ்கூல் இல்லை. சமீபத்தில் அக்ரிகல்சரல் காலேஜில் தற்காலிகமாக ஒரு ஸ்கூல் ஆரம்பித்திருக்கிறோம்.

திரு. சா. கணேசன் : அமைச்சர் அவர்கள் மதுரைக்கும், இராமநாதபுரத்திற்குமாக அதை அமைக்கவில்லை என்று கூறுகிறார்கள். ஆனால் மேசை மீது வைக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையின் ஏழாவது எண்ணிற்கு நேராக காண்பிக்கப்பட்டிருப்பது—பரமக்குடிக்கு நேரே "பள்ளிகள் எந்த மாவட்டங்களுக்குப் பயன்படுகின்றன" என்ற தலைப்பின்கீழ் 'இராமநாதபுரம், மதுரை' என்றும், மாணவர்களின் எண்ணிக்கையின்கீழ் '20' என்ற விவரமும் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, மதுரைக்கு வேறு, இராமநாதபுரத்திற்கு வேறு என்று தனிப் பள்ளி உள்ளது என்று சொல்வது எப்படிப் பொருந்தும் என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அது விவசாய ஸ்கூல். மதுரையில்
9-00 a.m. விவசாய ஸ்கூல் கிடையாது. விதைப் பண்ணைகள் இருக்கிற இடத்தில் அதை ஆரம்பிக்கிறோம். மதுரையையொட்டி பரமக்குடி இருக்கிறது. ஆகவே, அங்குள்ள பையன்கள் அந்த ஸ்கூலில் சேரலாம் என்று போட்டிருக்கிறார்கள். இப்போது தனியாக ஸ்கூல் வைக்கப்படுகிறது.

திரு. எஸ். முருகையன் : தலைவர் அவர்களே, இது போன்ற விவசாயப் பள்ளிகளில் படித்துப் பயிற்சி பெற்ற பல மாணவர்களுக்கு வேலை கிடைக்காமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அவர்களுக்கு வேலை கொடுக்க ஏதாவது உத்தரவாதம் அளிக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்த விவசாயப் பள்ளிகளை ஏற்படுத்தியதன் காரணமே, விவசாயக் குடும்பத்தில் பிறந்த வாலிபர்கள், மாணவர்கள் பயின்று தங்கள் தங்கள் நிலங்களில் இன்னும் அதிகமாகப் பாடுபட்டு அங்கே அதிகமாக உற்பத்தியைச் செய்ய வேண்டும் என்ற பெருநோக்கோடு தான் இவைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதில் ஒரு சிலர் வேலையை விரும்பினாலும் வேலை கொடுத்துக்கொண்டு இருக்கிறோம்.

தென்னாற்காடு மாவட்டத்தில் பொதுப் பாசன கிணறுகள்

* 116 கேள்வி—**திரு. ஆ. தங்கவேலு** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் பொதுப் பாசனக் கிணறுகள் வெட்டப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) பயனடைவோர் பேணிவரும் பொதுப் பாசனக் கிணறுகளை கனம் உறுப்பினர் குறிக்கின்றார் எனக் கருதுகிறேன். ஆம் எனில், அத்தகைய கிணறுகள்

5th August 1966]

தோண்டப்படவில்லை. எனினும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஊற்றுக் கிணறுகள் திட்டத்தின் கீழ் தோண்டப்பட்ட ஊற்று நீர்க் கிணறுகளும், சி. முட்லூர் கிராமத்தில் ஆற்று நீர் இறைக்கும் திட்டத்தின் கீழ்த் தோண்டப்பட்ட ஒரு கிணறும், பொதுப் பாசனக் கிணறுகளின் நோக்கத்தை நிறைவேற்றி வருகின்றன.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, பொதுக் கிணறு, இதற்கு முன்பு சில அங்கத்தினர்கள் கூட 'கம்யூனிட்டி வெல்' என்று அறிமுகப்படுத்தினர்கள், வெட்டுவது பெரிய விவசாயிகளுக்குச் சாதகமாக இருக்குமா? அல்லது சிறு விவசாயிகளுக்குச் சாதகமாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : பொதுக் கிணறு வெட்டினல் அதைச் சுற்றி நிலங்கள் யார் யாருக்கு இருக்கிறதோ அவர்கள் சாதகம் அடைவார்கள்.

Banana and Fruit Research Stations

* 117 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state :

(*a*) Whether there is any proposal to set up new Banana Research Stations and Fruit Research Stations in the State; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Committee on Agricultural production

* 118 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state :

(*a*) the particulars of recommendations made by the Committee on Agricultural production under the Chairmanship of Sri S. Viswanathan, Member, Board of Revenue; and

(*b*) the decisions so far taken thereon?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) வேளாண்மை உற்பத்திக் குழு 161 பரிவுரைகள் செய்துள்ளது. அக் குழுவின் அறிக்கை நகல்கள் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. அந்த அறிக்கையில் 257—299 பக்கங்களில் இப்பரிவுரைகளின் சுருக்கம் ஒன்று தரப்பட்டுள்ளது. இதுவரை 29 பரிவுரைகளின் மேல் அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. இது மேற்படி சுருக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எஞ்சிய பரிவுரைகளை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

திரு. வை. சங்கரன் : சார், அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ள பரிவுரைகளில் முக்கியமானவற்றைக் குறிப்பிட முடியுமா?